CC.No. 189/2010 30.03.2026

PW1 தமிழ்வாணன் த/பெ.காஞ்சிவனம்

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்ஏ படித்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். யார் சொல்ல, சொல்ல புகார் மனு எழுதப்பட்டது என்றால் நானகத்தான் எழுதினேன். நான் எப்பொழுதும் ரயில் நிலையங்களில் சொல்லப்படுவதுபோல் 24 நேரத்தை குறிப்பதைபோல் சொல்வேன் என்றால் சரியல்ல. என்னிடம் தற்போது காட்டப்பபடும் புகார் மனுவில் 21.00 என்று உள்ளது என்றால் சரிதான். ரயில்வே நேரம் குறிப்பிடுவது எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதேபோல் நான் எப்பொழுதும் ரயில்வே நேரம் குறிப்பிட மாட்டேன் என்றால் சரிதான். என்னிடம் தற்போது காட்டப்படும் புகார் மனுவில் " இன்று வந்து 14.03.2010 ம் தேதி எனது தாயாரின் தங்க செயின் 4 பவுனை திருடிச்சென்றவனை கண்டுபிடித்து திருடு போன தங்க செயினை மீட்டுதருமாறு கேட்டுக்கொள்கிறேன் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு நபர்தான் செயினை அறுத்து சென்று ஓடியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திருடுபோன செயின் என்ன வகை என்று எனது புகார் மனுவிலும், போலீசார் விசாரணை, முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் தாலி செயின் என்று சொல்லியுள்ளேன், வகையை குறிப்பிட்டு சொல்லவில்லை. எனது வீட்டின் கீழ் தளத்தில் இரண்டு கழிவறைகள் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் கிழக்கே படுக்கை அறை உள்ளது என்றால் சரிதான், அதில் கழிவறை வசதி உள்ளது என்றால் சரிதான். எனது தந்தை எங்கள் வீட்டின் ஹாலில்தான் படுத்திருந்தார் என்றால் சரிதான். ரோட்டிலிருந்து என் வீட்டின் உள்ளே எனது தாயார் படுத்திருக்கும் அறையை பார்க்கமுடியாது என்றால் நேரடியாக பார்த்தால் தெரியாது, ஜன்னல் வழியாக பார்த்தால் தெரியும். ஜன்னலை குறித்து புகார் மனுவிலும், போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை

என்றால் சரிதான்.

2) அந்த படுக்கை அறைக்கு ரோட்டு பக்கமாக ஜன்னல் வசதி இல்லை என்றால் சரிதான், வடபுறமாக ஜன்னல் இருந்தது. அந்த வீட்டின் உள்ளே செல்வதற்கு எனது தந்தை படுத்திருந்த இடத்தை தாண்டிதான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். எனது தந்தை கழிவறை செல்வதற்காக எங்கள் வீட்டின் ஹாலில் விளக்கு எரிந்துகொண்டுதான் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் எத்தனை மணிக்கு தூங்க செல்வேம் என்றால் 09.00 மணிக்கு மேல். புகார்கொடுத்த அன்றையதினமே அவ்வாறுதான் தூங்க சென்றோம் என்றால் ஞாபகம் இல்லை. எனது தாயார் தூங்கும் அறையில் இரண்டு கதவுகளில் ஒரு கதவு தாள் போடப்பட்டிருந்தது, மற்றொரு கதவு லேசாக திறந்திருந்தது என்றால் ஞாபகம் இல்லை. நான் ஞாபகம் இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, பொதுவாக கதவை திறந்தால் சத்தம் கேட்கும் என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார் மனு, போலீசார் விசாரணை மற்றும் முதல் விசாரணையில் கதவு திறந்த சத்தம் கேட்டதாக எந்த சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

3) சாட்சி குருவம்மாள் எனது தாயார் என்றால் சரிதான். சாட்சி சுதா எனது மனைவி என்றால் சரிதான், சாட்சி பாண்டி மற்றும் சுப்பையா எனது சித்தப்பா மகன்கள் என்றால் சரிதான். சாட்சி பாரதி மற்றும் நவீன்குமார் எனக்கு என்ன உறவு என்றால் பாரதி எனது அண்ணன், நவீன்குமார் எனது 2 வது அண்ணன் மகன். எங்கள் தெருவில் மற்ற நபர்களும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் என் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரிகளை கண்டறிவதற்கு அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தினார்களா என்றால் இல்லை, நான் முதல் விசாரணை சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு வந்தபோது போலீசார் இவர்கள் தான் எனது வீட்டில் திருடியவர்கள் என்று கூறினார்கள். நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, எனது தாயாரின் செயினை யாரும் அறுத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. என்னிடம்

தற்போது காட்டப்படும் புகைப்படத்தில் செயின் அறுபட வில்லை என்றால் சரிதான். நான் எனது புகார் மனுவில் செயினை அறுத்து சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை, எதிரிகள் எந்த செயினையும் அறுக்கவில்லை, எந்த ஒரு பொருளையும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். எத்தனை நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த மறுநாள் காலை என்னை விசாரித்தார்கள். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந் சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

CC.No. 189/2010 30.03.2026

PW2 சுதா க/பெ.தமிழ்வாணன்

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

அசா1 எனது கணவர் என்றால் சரிதான். சாட்சி சுப்பையா, பாண்டி, பாரதி, நவீன்குமார் ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். போலீசார் எங்கு வைத்து, எப்போது விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த அன்றைய தின இரவு (புகார் கொடுத்த மறுநாள் காலை விசாரித்தாக சாட்சி சாட்சியம் அளிக்கிறார்). நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, புகார்தாரர் எனது கணவர் என்பதால் நடக்காத சம்பவத்திற்கு எனது கணவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.